முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 166, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

166—

குடியிருப்புகளைச் சீரமைத்தல்

***4470—திரு. கே.எஸ். தென்னரசு:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாநகராட்சி, மரப்பாலம் பகுதியிலுள்ள தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியக் குடியிருப்புகளைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஈரோடு மாநகராட்சி, மரப்பாலம் பகுதியில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலமாக 1984–1985 ஆம் ஆண்டில் 204 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டன. இக்குடியிருப்புகள் தவணைமுறை விற்பனைத் திட்டத்தின்கீழ் (Hire Purchase) *ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இக்குடியிருப்புகளுக்கு, 2017–2018 ஆம் ஆண்டில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, ரூபாய் 40 இலட்சம் செலவில் படிக்கட்டுகள் மற்றும் சுவர்களுக்கு காரை, வர்ணம் பூசுதல் மற்றும் கழிவுநீர்க் குழாய்கள் சீரமைத்தல் போன்ற பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொள்ள உத்தேசித்துள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள்.*

திரு. கே.எஸ். தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இருந்தாலும் மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும்; இவர்போல யார் என்று ஊர் சொல்ல வேண்டும்' என்று*

வாழ்ந்து மறைந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியை வழிநடத்தும் மாங்கனி மாவட்டத்தின் மைந்தன், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவராகிய தங்களையும் வணங்கி, எனது கேள்வியினைத் தொடங்குகிறேன்.

ஈரோடு கிழக்கு பகுதியில் மரப்பாலம் நடராஜா தியேட்டர் அருகில் 204 வீடுகளும்; குயவன் திட்டு பகுதியில் 192 வீடுகளும்; மற்றும் டோனி பிரிட்ஜ் பகுதியில் 72 வீடுகளும் ஆக 468 வீடுகள் பழுதடைந்துள்ளன. இந்த வீடுகளை இடித்து அப்புறப்படுத்தி புதிய வீடுகள் கட்டித் தருவதற்கு மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாநகராட்சியின் சில பகுதிகளிலுள்ள வீடுகளை இடித்துவிட்டு, புதிய வீடுகள் கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள் கோரிக்கை வைத்துள்ளார்.

ஈரோடு பகுதியில் தென்றல் நகர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நல்லாசியோடு ஏற்கெனவே பல்வேறு திட்டப் பணிகள் இன்றைக்கு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அனைவருக்கும் வீடு கட்டும் திட்டத்தின்கீழ், மாநகராட்சிப் பகுதிகளில் ஏறத்தாழ 1,900 வீடுகள், அவர்களுடைய சொந்த நிதியின்கீழ் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோருகின்ற பகுதிகளுக்கு குடிசை மாற்று வாரியத்தின் பொறியாளர்களை நேரடியாக அனுப்பி, எதைச் செய்தால் சரியாக இருக்கும் என்று ஆய்வு செய்து அதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள்.*

திரு. கே.எஸ். தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு கிழக்கு தொகுதி, அன்னை சத்யா நகரில் 448 வீடுகளும்; பெரியார் நகரில் 400 வீடுகளும்; ஜீவானந்த் ரோடு புதுவைக் காலனியில் 400 வீடுகளும்; கருங்கல்பாளையம் அழகரசர் நகரில் 272 வீடுகளும் ஆக மொத்தம் 1,520 வீடுகள் கட்டும் பணிகள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கருணையோடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதைப்போல, நடராஜா தியேட்டர், குயவன் திட்டு பகுதி மற்றும் டோனி பிரிட்ஜ் அருகிலுள்ள வீடுகள் அனைத்தும் 1984–1985 ஆம் ஆண்டில் நூற்றாண்டு விழா நாயகன் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சியில் கட்டப்பட்டு, 32 ஆண்டுகள் முடிவுற்றுள்ளன. இந்த வீடுகள் அனைத்தும் பழுதடைந்துள்ளதால், அனைத்தையும் இடித்து அப்புறப்படுத்திவிட்டு, அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டிக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன். அந்தப் பகுதியிலுள்ள வீட்டு வசதி வாரிய அடுக்குமாடிக் குடியிருப்புப் பகுதிகளிலுள்ள சாலைகள் அனைத்தும் மிகவும் பழுதடைந்துள்ளன. குடிசை மாற்று வாரியத்திடம் இதுகுறித்துக் கேட்டால் மாநகராட்சியிடம் கேட்க வேண்டுமென்று தெரிவிக்கிறார்கள். மாநகராட்சியிடம் கேட்டால் குடிசை மாற்று வாரியம் இன்னும் ஒப்படைக்கவில்லை என்று சொல்கிறார்கள். இந்த நிலையில் அந்தப் பகுதியிலுள்ள மக்கள் பயன்பெறும் வகையில் நல்ல முறையில் சாலை வசதிகள் அமைத்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு வீட்டு வசதி வாரியத் துறை அமைச்சர் அவர்களும் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியம்மூலம் கட்டப்பட்ட வீடுகளைப் பொறுத்தவரையில், அவர்கள்*

வாங்குகின்றபோதே அந்தப் பகுதியிலே எத்தனை வீடுகள் கட்டப்பட்டுள்ளனவோ அவற்றிற்கு ஒரு நலச் சங்கத்தினை அமைத்து அதன்மூலம் பராமரிப்புப் பணிகளை பார்த்துக் கொள்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற அந்தப் பகுதிக்கு சாலைகள் போடுவது என்பது உள்ளாட்சித் துறை சம்பந்தப்பட்ட பணிகள் என்பதனால், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களோடு கலந்து பேசி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக் அவர்கள்.*

திரு. நா. கார்த்திக்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சிங்காநல்லூர் தொகுதிக்குட்பட்ட உழவர் சந்தை பகுதியில் உள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் அடுக்குமாடிக் குடியிருப்புகள் மிகவும் மோசமான நிலையில், இடிந்து விழக்கூடிய நிலையில் இருக்கின்றன. அங்கு ஆயிரக்கணக்கான மக்கள் வசித்து வருகின்றனர். இதே வினாவினை 2016 ஆம் ஆண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் வினாவாகத் தொடுத்தேன். அந்த இடங்களை ஆய்வு செய்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால், இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனை ஆய்வு செய்து அந்தப் பகுதி மக்கள் அங்கு வாழ்வதற்குரிய பாதுகாப்பினை வழங்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிங்காநல்லூர் பகுதியில் கட்டப்பட்டுள்ள வீட்டு வசதி வாரிய குடியிருப்புகள் சிதிலமடைந்துள்ளதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொன்னார்கள். கடந்த முறை கேட்டபோது 'ஆய்வு செய்யப்படும்' என்று சொன்னதாகவும், ஆனால், ஆய்வு செய்யப்படவில்லை என்றும் சொல்கிறார்கள். ஆனால், இங்கு பேசியதற்குப் பிறகு பொறியாளர்களை அனுப்பி, அப்பகுதியை

ஆய்வு செய்து வீட்டு வசதி வாரியத்தின்மூலம் அதற்குண்டான பணிகளை எப்படி மேற்கொள்ளலாம் என்பது குறித்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடத்தில் கலந்து பேசிவருகிறோம். இந்த அரசைப் பொறுத்தவரை, செய்வதைத்தான் சொல்வோம், சொல்வதைத்தான் செய்வோம் என்பதுதான் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தாரக மந்திரம். 2016—ல் சொன்னோம், செய்யவில்லை என்று சொன்னார்கள். அதற்கான கருத்துருக்கள் எல்லாம் பெறப்பட்டு ஆய்வில் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 167, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். தங்கதுரை, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

167—

வாசனைத் திரவியத் தொழிற்சாலை

***5307—திரு. ஆர். தங்கதுரை:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தொகுதி, நிலக்கோட்டையில் வாசனைத் திரவியத் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நிலக்கோட்டை தொகுதி, நிலக்கோட்டையில் வாசனைத் திரவியத் தொழிற்சாலை அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். தங்கதுரை அவர்கள்.